செ.வெ.எண். 46/ஆகஸ்ட்                                                                                    தேதி : 20.08.2016

# பத்திரிக்கைச் செய்தி

## தேசிய காசநோய் தடுப்பு திட்டத்தில் பணிபுரியும் களப்பணியாளர்கள் 9 நபர்களுக்கு இருசக்கர வாகனங்களை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.





தருமபுரி நகராட்சி நகர் நல மையத்தில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் திட்டம் தருமபுரி மாவட்டம் சார்பில் களப்பணியாளர்களுக்கு இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா இன்று (20.08.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் குத்து விளக்கேற்றி தேசிய காசநோய் தடுப்புத் திட்டத்தில் பணிபுரியும் களப்பணியாளர்கள் 9 நபர்களுக்கு இருசக்கர வாகனங்களை வழங்கி கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுகாதார துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதன் ஒரு அங்கமாக 108 அவசர கால ஆம்புலன்ஸ் திட்டத்திற்கு ரூ. 70 இலட்சம் மதிப்பீட்டில் அவசர கால முதலுதவிக்கான 41 இருசக்கர வாகனங்களின் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கியுள்ளார்கள். விபத்து பகுதிகளுக்கு 108 ஆம்புலன்ஸ் செல்வதற்கு முன்பாக பாதிப்புக்குள்ளானவருக்கு உடனடியாக முதலுதவி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கிய இருசக்கர வாகனம் வழிவகை செய்யும்.

அதேபோன்று தருமபுரி மாவட்டத்தில் இயங்கி வரும் தேசிய காசநோய் தடுப்பு திட்டத்தில் பணிபுரியும் களப்பணியாளர்கள் (முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர்கள்) 9 பேருக்கு தலா ரூ. 45 ஆயிரம் மதிப்பில் இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மொத்தம் மதிப்பு ரூ. 4 இலட்சத்து 75 ஆயிரம் ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க வழங்கப்பட்ட இந்த இருசக்கர வாகனங்களின் மூலம் களப்பணியாளர்கள் தருமபுரி, பாலக்கோடு, காரிமங்கலம், பென்னாகரம், இண்டூர், பாளையம்புதூர், அரூர், பி. மல்லாபுரம், மொரப்பூர், தீர்த்தமலை ஆகிய பகுதிகளை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு அப்பகுதி கிராமங்களுக்கு சென்று காசநோய் அறிகுறி உள்ளவர்களையும் அல்லது காசநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவி, சிகிச்சை முறைகள் குறித்து எடுத்துரைத்து அந்த நோயிலிருந்து அவர்கள் விடுபடுவதற்கான பணிகளை மேற்கொள்வார்கள் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊராட்சி தலைவர் திரு. தொ.மு. நாகராசன், இணை இயக்குநர் (பொ) மரு. ராஜ்குமார், துணை இயக்குநர் (காசநோய்) மரு. நெடுமாறன், மருத்துவர் (காசநோய்) மரு. சந்திரசேகர், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஜெயவந்த், எச்.ஐ.வி, காசநோய் ஒருங்கிணைப்பாளர் மரு. குணசேகரன், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. எம். பொன்னுவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.